**அக்மீமன பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்மீமன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அக்மீமன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமஉள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமா்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 மற்றும் 2019 ஆண்டுகளின் போது சபையின் பெயரில் சாட்டப்பட்டிருந்த ரூபா 7,521,373 தொகை பெறுமதியான 02 வாகனங்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 92,000 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தொடர்ந்துவரும் ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 308,511 இற்கான வீதவரி, முற்பெறுவனவின் கீழ் மற்றும் மீளாய்வாண்டில் கிடைத்திருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,050,000 தொகை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | முத்திரைக் கட்டணம் ரூபா 318,629 தொகை மற்றும் நிலையான வைப்புக்கள் ரூபா 2,367,279 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | செலுத்தப்படாத செலவுகள் ரூபா 48,193 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதியில் சுட்டிக் காட்டியுள்ள ரூபா 133,986 தொகைக்கான மீதி பணமாக கிடைக்கப் பெற்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளில் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 73,086 தொகை செலுத்த வேண்டிய நிர்மாண வேலைகளின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 544,276 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 19,367,908 இற்கான 05 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 19 | அனைத்து அடியிதழ் புத்தகங்களும் செயலாளரின் பொறுப்பில் காணப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றின் பாதுகாப்புத் தன்மை மற்றும் உரிய முறையில் பயன்படுத்தல் தொடர்பாக அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் அதற்கு முரணாக 247 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் களஞ்சியப் பொறுப்பாளரிடம் காணப்பட்டது. | அனைத்து அடியிதழ் புத்தகங்களும் தனியாக கபர்ட் ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 96,392,891 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12,162,393 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,882,505 | 9,321,395 | 8,454,607 | 16,224,172 | 5,080,000 | 4,630,180 | 3,118,747 | 15,357,384 |
| வாடகை | 2,508,600 | 2,597,335 | 2,609,002 | 689,811 | 43,595,000 | 2,339,200 | 2,177,217 | 701,478 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,890,150 | 5,912,560 | 5,890,060 | 77,000 | 50,385,060 | 6,067,343 | 6,095,643 | 54,500 |
| ஏனைய வருமானங்கள் | 21,891,070 | 23,232,625 | 23,164,335 | 739,130 | 53,060,600 | 10,140,566 | 10,016,566 | 670,840 |
| | 33,172,325 | 41,063,915 | 40,118,004 | 17,730,113 | 152,120,660 | 23,177,289 | 21,408,173 | 16,784,202 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மொத்த வருமானம் ரூபா 16,784,202 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 17,730,113 இற்கான பெற வேண்டிய மீதி ஒன்று காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) ஆண்டிற்குரிய வீதவரி வருமானத்தில் எதுவித வரியும் செலுத்தாக 6003 அலகுகள் காணப்பட்டதுடன், அந்த அலகுகள் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த வீதவரி வருமானம் ரூபா 14,773,222 தொகை காணப்பட்டமையால், சபையின் வருமானம் அறவீடு செய்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்து என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (இ) மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 427,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 200,652,483 தொயையாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படும் என. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 800,000 கிரயத்தையுடைய டிரக்டர் என்ஜின் 02 வருட காலம் முதல் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன் அதனை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அந்த டிரக்டர் வண்டி திருத்த வேலை மேற்கொண்ட பின்னர் ஓட்டநிலையில் பயன்படுத்தப்படும். | சொத்துக்கள் விரைவாக திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 40 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா | கட்டணம் செலுத்தாத நபர்களுக்கு எதிராத சட்ட | அறவிடப்பட வேண்டிய அறிவித்தல் பலகைக் |

| | | | |
|---|---|---|---|
| | 1,084,300 இற்கான கட்டணமொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 15 வியாபார நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் தமது வியாபார அலுவல்களை நடாத்திச் செல்வதனால் சபைக்கு ரூபா 67,500 இற்கான வருமானம் ஒன்றை இழந்துள்ளது. | தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 36 கைத்தொழில்களுக்கான அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காமையால் ரூபா 162,000 இற்கான வருமானமொன்றை இழந்திருந்தது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | வெளிக்கள பரிசோதனைகள் மேற்கொண்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 39 காணிகளின் நிலவரைபடங்கள் சபையில் காணப்படாததுடன் 15 காணிகளின் உரிமைக்காக காணி உறுதிகள் சபையில் காணப்படவில்லை. | பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | காணி உறுதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,650,000 பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 600,000 தொகைக்கான 02 நீர்பவுசர்கள் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் வினவப்பட்டுள்ளது என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 700,000 கிரயத்தையுடைய சாக்கடை பவுசர்கள் 2020 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலையின் பின்னர் சாக்கடை சேவை ஆரம்பிக்கப்படும் என. | சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆண்டில் குப்பை போக்குவரத்துக்காக கிடைத்திருந்த ரூபா 6,221,373 தொகை பெறுமதியான கம்பெக்டர் குறைபயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டது. | உக்காத குப்பைகளுக்கு மாத்திரம் கம்பெக்டர் வாகனம் பயன்படுத்தப்படுகின்றது என. | சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2018 ஆண்டில் மற்றும் அதற்கு முன்னைய சபையினால் ரூபா 98,995 தொகை செலுத்தி கொள்வனவு செய்திருந்த 14 வகையான மின்சார இருப்புக்களை சேர்ந்த 90 விடயங்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. | தேவையான பராமரிப்பு அலுவல்களுக்காக அந்த விடயங்களை பயன்படுத்துவதற்காக களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது என. | தேவைப்பாடுகள் மீது கவனம் செலுத்தி பெறுகை மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 பாதை அபிவிருத்தி நிர்மாண வேலைகளுக்காக உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் அந்த 03 நிர்மாண வேலைகளுக்குமாக ரூபா 349,538 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ரேட்கள் வெளியிடப்பட்டிருத்தல் தொடர்பாக அறிந்திருக்காமை | குறிப்பிட்ட ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அலுவல்களுக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த ரேட்கள் பயன்படுத்தப்படாமையால் 21 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 596,404 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ரேட்கள் பயன்படுத்தப்படுவது நீண்டகால செயற்திட்டங்களுக்காகும் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 132,191 தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1998 ஆண்டு முதல் அறவீடு செய்யப்பட வேண்டிய கடன் மீதியொன்றாகும் என. | நிலுவைக் கடன் மீதி அறவீடு செய்யப்பட வேண்டும். |